**<u>தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்</u>**

எண்.117/2025 நாள்: 28.08.2025

**<u>செய்திக் குறிப்பு</u>**

**<u>ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள்-I (தொகுதி-I பணி)</u>**

**<u>(அறிவிக்கை எண்.04/2025)</u>**

**<u>முதல்நிலைத் தேர்வு முடிவு வெளியீடு</u>**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள்-I (தொகுதி–I பணிகள்)-இல் உள்ள பதவிகளின் நேரடி நியமனத்திற்காக 01.04.2025 அன்று அறிவிக்கை வெளியிட்டது. இத்தெரிவிற்கான முதல்நிலைத் எழுத்துத் தேர்வு 15.06.2025 முற்பகல் அன்று நடைபெற்றது. இத்தேர்விற்கு 2,42,829 தேர்வர்கள் தேர்வு எழுத அனுமதிக்கப்பட்டனர் மற்றும் இத்தேர்வு 38 மாவட்ட தேர்வு மையங்கள் மற்றும் 6 தாலுக்கா தேர்வு மையங்களில் நடைபெற்றது. மேற்படி தேர்வினை 1,81,422 தேர்வர்கள் எழுதினர்.

**இத்தெரிவிற்கான தேர்வு முடிவுகள் ஆகஸ்ட் மாதம் 2025-இல் வெளியிடப்படும் என தேர்வாணைய வலைதளத்தில் தெரிவிக்கப்பட்டது. அவ்வாறே, தேர்வாணையம் மேற்குறிப்பிட்ட முதல்நிலை எழுத்துத் தேர்வுக்கான முடிவுகள் 28.08.2025 அன்று தேர்வாணைய வலைதளத்தில் வெளியிட்டுள்ளது.** மேற்கண்ட அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விதிகளின்படி, முதன்மை எழுத்துத் தேரவுக்கு தற்காலிகமாக 1,843 தேர்வர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர் மற்றும் அவர்களின் பதிவெண் கொண்ட பட்டியல் தேர்வாணைய வலைதளத்தில் (www.tnpsc.gov.in) வெளியிடப்பட்டுள்ளது.

மேலும், மேற்கண்ட முதன்மை எழுத்துத் தேர்வு 01.12.2025 முதல் 04.12.2025 வரை சென்னை தேர்வு மையத்தில் மட்டும் நடைபெற உள்ளது.

தேர்வர்கள், தேர்வாணைய இணையதளத்தினை தொடர்ந்து பார்வையிடுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர்

Tamil Nadu Public Service Commission

No. 117/2025 Date: 28.08.2025

## PRESS RELEASE

### Combined Civil Services Examination-I (Group-I Services)
### (Notification No.04/2025)
### Publication of results of Preliminary Examination

The notification for direct recruitment to the posts in Combined Civil Service Examination-I (Group-I Services) was published on 01.04.2025. The Preliminary Examination for the said recruitment was held on 15.06.2025 FN at 38 District Centres and 6 Taluk Centres. A total number of 2,42,829 candidates were admitted to the said Preliminary Examination and 1,81,422 candidates had appeared for the said examination.

**In the Commission's website, it has been informed in that the results of the said Preliminary Examination would be published in the month of August 2025. Accordingly, as per the conditions stipulated in the said Notification, 1,843 candidates have been provisionally admitted to the Main Written Examination and the list of register number of the said candidates has been published on the Commission's website (www.tnpsc.gov.in) on 28.08.2025.**

Further, the Main Written Examination will be held from 01.12.2025 to 04.12.2025 at Chennai centre only.

The candidates are directed to watch the Commission's website for all further updates and intimation.

Controller of Examinations